**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.01/2018 –** P.W.2

Deposition of witness for Prosecution:

Name : திருமதி. சுகன்யா Husband Name. ஜெரோம்

Village :

Date : 27.01.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 27.01.2025.

**( எதிரிகள் ஆஜர் )**

**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு மறு குறுக்கு விசாரணை.**

எனது திருமணம் காதல் திருமணம் என்று சொன்னால் சரிதான். எனது திருமணத்தை எனது பெற்றோர்கள் ஆரம்பத்தல் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள்தான் எனது காதல் திருமணத்தை செய்து வைத்தார்கள். எங்கள் திருமணம் எங்கு நடந்ததென்றும், அதனை எங்கு வைத்து எப்போது பதிவு செய்தோம் என்றால் 19.03.2014 ம் தேதி எங்கள் வீட்டில் வைத்து பதிவு திருமணமாகத்தான் நடைப்பெற்றது. அதற்கு முன்பாக எனக்கு வேறு வகையில் திருமணம் நடைபெறவில்லை. தூத்துக்குடி பதிவாளர் எங்கள் வீட்டிற்கே வந்து எனது காதல் திருமணத்தை பதிவு செய்தார். எங்கள் ஊருக்கு அருகே புளியம்பட்டி அந்தோணியார் கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த புளியம்பட்டியில் உள்ள அந்தோணியார் கோவிலில் வைத்து என்னிடமும், எனது அப்பா, அம்மாவிடமும் அங்கு வந்திருந்த ஆஜர் எதிரிகள் இருவரும் என்னுடைய குழந்தையை ஒப்படைத்தார்கள் என்று சொன்னால் சரிதான். அதன் பின்னர் 10 நாட்கள் கழித்து நானும் என்னுடைய பெற்றோர்களும் குழந்தையுடன் பழனிக்கு சென்றிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது பெற்றோர்களும் எனது குழந்தையை தேடுவதற்காகத்தான் பழனிக்கு சென்றோம். புளியம்பட்டி அந்தோணியார் கோவிலில் வைத்து நான் எனது குழந்தையை பெற்ற பின்னர் அந்த குழந்தை எங்கு போனது என்றால் அதன் பின்னர் நான் அந்த குழந்தையை தூக்கிகொண்டு எனது அப்பா, அம்மா வீட்டிற்கு

சென்றுவிட்டேன். பின்னர் என்ன காரணத்திற்காக எனது குழந்தையை தேடிக்கொண்டு நானும், எனது அப்பா, அம்மாவும் பழனி சென்றோம் என்றால் வீட்டிற்கு நான் குழந்தையை எடுத்துவந்தபின்னர் குழந்தையுடன் வேளாங்கண்ணிக்கு சென்றிருந்தேன். அங்கு குழந்தை காணாமல் போனதால் குழந்தையை தேடுவதற்காக பழனி சென்றோம். இந்த விபரங்களை புகாரிலும், போலிசார் என்னை விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தற்போது காட்டப்படும் எமசாஆ.1றான ஆவணத்தில் உள்ள கையெழுத்தும் கை ரேகையும் என்னுடையதுதானா என்றால் என்னுடையதில்லை. நான் சொல்லக்கூடிய விபரங்கள் தவறும் என்றும் எமசாஆ.1றான குழந்தையை தத்துக்கொடுத்தவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்தும், கை ரேகையும் என்னுடையதுதான் என்று சொன்னால் என்னுடையதில்லை. அது என்னுடைய கையெழுத்து மற்றும் கை ரேகை இல்லை என்பதை நிருபணம் செய்ய நான் தற்போது எனது ஒப்புக்கொள்ளப்படும் கையெழுத்துக்கள் கொண்ட அரசால் அங்கீகரிக்கப்பட்ட 2015ம் கால கட்டத்திற்குரிய ஆவணங்களை ஒப்படைக்க தயாரா, அதேப்போன்று தற்போது எனது இடது கை பெரு விரல் ரேகை வைத்துக்கொடுக்க தயாரா என்றால் சாட்சி பதில் கூறாமால் மௌனமாக இருக்கின்றார். **சாட்சியிடம் மௌனமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், வினாவிற்கான பதிலை அளிக்கலாம் என்றும் இந்நீதிமன்றத்தால் எடுத்துக்கூறப்பட்டது. அதன் பின்னிட்டு சாட்சி பதில் கூறாமல் மௌனமாக இருந்ததால் மேற்படி வினாவிற்கு சாட்சியிடம் பதில் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கொண்டது**.

கைரேகையை நீதிமன்றத்தின் முன்பு எனது சாட்சிய வாக்குமூலத்தில் வைத்து கொடுக்கவாவது தயாரா என்றால் அதற்கும் சாட்சி பதில் கூறாமல் மௌனமாகவே இருக்கின்றார். மீண்டும் சாட்சியிடம் எதிரிகள் தரப்பு கற்றிந்த வழக்கிறிஞரே சாட்சிய வாக்குமூலத்தில் இடது கை பெருவிரல் ரேகை வைத்துக்கொடுப்பதில் என்ன பிரச்சனை என்று கேட்கப்பட்டது. அதற்கு சாட்சிய அந்த கைரேகையை வைத்து என்ன செய்வீர்கள் என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரிடம் எதிர் வினா வினாவினார். அதற்கு எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எமசாஆ.1 றான ஆவணத்தில் உள்ள இந்த

சாட்சியின் கைரேகையும் ஒன்றுதான் என்பதை நிரூபணம் செய்ய கைரேகை நிபுணருக்கு அனுப்பிவைக்கப்படும் என்று சாட்சியிடம் விளக்கினார்.

அதன் பின்னிட்டும் சாட்சி மேற்கண்ட எதிரிகள்தரப்பு வினாவிற்கு கைரேகை வைத்து கொடுக்கிறேன் அல்லது இல்லை என்று எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாகவே இருக்கின்றார். எமசாஆ.1றான ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகையானது என்னுடையது என்பதால்தான் நான் எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாகவே இருக்கின்றேன் என்று சொன்னால் சாட்சி எமசாஆ.1றான ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை தன்னுடையதில்லை என்று சாட்சியம் அளிக்கின்றார். தற்போது காட்டப்படும் எமசாஆ.1றான ஆவணம் என்ன ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்லும் விபரம் தவறு என்றும் எமசாஆ.1றான ஆவணமானது நானே சாட்சிகள் முன்னிலையில் எனது குழந்தையை 2ம் எதிரி ஈஸ்வரனுக்கு தத்துக்கொடுத்ததற்காக ஏற்படுத்திக்கொடுத்த ஆவணம் என்று சொன்னால் சாட்சி நீண்ட நேரம் மௌனமாக இருந்துவிட்டு பின்னர் நான் குழந்தையை தத்து கொடுப்பதாகவே சொல்லவில்லை என்று சாட்சியம் அளிக்கின்றார். வேற எதற்காக எமசாஆ.1றான ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் எனக்கு அந்த ஆவணம் என்னவென்றே தெரியாது என்று சாட்சியம் அளிக்கின்றார்.

நான் எனது நீதிமன்ற சாட்சிய வாக்குமூலத்தில் எனது இடது கை பெருவிரல் ரேகையை வைத்துக்கொடுக்க மறுத்தாலும், எனது இடது கை பெருவிரல் ரேகையை எதிரிகள்தரப்பில் வைத்துக்கொடுக்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்வதன் அடிப்படையில், வழக்கின் உண்மை நிலையை வெளிச்சத்திற்கு கொண்டுவர நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் நான் எனது இடது கை பெருவிரல் ரேகையை வைத்துக்கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் நான் எனது இடது கை பெருவிரல் ரேகையை வைத்துக்கொடுக்க மாட்டேன் என்று சாட்சி சாட்சியம் அளிக்கின்றார்.

**மறு குறுக்கு விசாரணை தொடர்ச்சி மதியம் 2.30 மணிக்கு ஒத்திவைக்க வேண்டுமென்று எதிரிகள் தரப்பில் வேண்டியதன்பேரில் தற்போது நேரம் மதியம் 1.45 மணி ஆகிவிட்டதால் அவ்வாறே ஒத்திவைக்கப்பட்டது.**

**மறு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**.

எமசாஆ.1றான குழந்தை தத்துக்கொடுத்ததற்கான ஆவணத்தின் மூலம் நானாகவே எனது குழந்தையை 2ம் எதிரியிடம் கொடுத்துவிட்டு அதற்காக மேற்படி ஆவணத்தில் கையெழுத்தும் கைரேகையும் வைத்துவிட்டு, தற்போது அந்த விபரம் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதற்காகவே எமசாஆ.1றான ஆவணத்தில் உள்ள எனது கையெழுத்து மற்றும் கை ரேகையை எனது இல்லை என்று மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**